போது உத்திரவு போட்டிருப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். கம்பெனிகள் முத்திரையிடவேண்டுமென்று சொல்லப்பட்டாலும் கூட பெருவாரியான கம்பெனிகள் அந்த முத்திரையைப் போட்டுக் கொடுக்க முன் வருவதில்லை. இந்த நிலையிலே அரசே அந்த முத்திரையைப் போட்டுக் கொடுக்கக்கூடிய முறையிலே நடவடிக்கை எடுக்கப்படுமா ? மருந்துகள் தீர்ந்துவிட்டால் அந்த மருந்துகளை ஆஸ்பத்திரிகள் வாங்கிக்கொண்டு நோயாளிகளுக்கு சிகிச்சைக் கொடுக்கக்கூடிய முறையிலே ஏற்பாடுகளைச் செய்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : முத்திரை மருந்துகள் தீர்ந்துவிட்டால் என்ன செய்வது என்று கேட்கிறார்கள் சில கேட்டகரிஸ் பொறுத்தவரையிலே எவ்வளவு வேண்டுமானாலும் மருந்துகள் இருக்கின்றன. உதாரணமாக Parasitamal என்ற மருந்திலே தமிழ்நாடு அரசு முத்திரையிட்டு ' த/அ ' என்று போட்டுக் கொடுக்கிறார்கள். சில மருந்துகளைப் பொறுத்தவரையில் classics என்ற மருந்து ஒரு ஜெர்மன் கம்பெனியில் தயாரிக்கப்படுகிறது. அப்படிப்பட்ட கம்பெனிகளிடமிருந்து முத்திரைப் போட்டு வாங்க முடியாது. உடனுக்குடன், மருந்துகள் இல்லாமல் போகிற நிலையில், மருந்துகளை வாங்கி நோயாளிகளுக்குக் கொடுக்கமுடியாத பிரச்சினை ஏற்படும் என்று சொல்ல முடியாது. ஏனென்றால் இந்த கிளாஸிக்ஸ் போன்ற மருந்துகளைக்கூட நேரடியாக அவர்கள் வாங்கிக்கொள்கிற முறையிலே உத்திரவு போடப்பட்டிருக்கிறது. ஆகவே நோயாளிகளுக்கு எந்தவிதமான அவதியும் இல்லாமல் பாதுகாப்புக் கொடுக்கப்படுகிறது. ஆகவே, எந்தப் பிரச்சினையும் இதிலே எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) ஆளுநர் செய்தி—1980–81 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1980–81 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகளை பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது :

"In pursuance of Article 203, clause (3) of the Constitution of India, I, Prabhudas B. Patwari, Governor of Tamil Nadu, hereby gives my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for Grants for the year 1980–81."